பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 19 | செவ்வாய்க்கிழமை | 02.07.2024 | அதிர்வு 336

## எரிவாயு விலை இன்று திருத்தம்



லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

06▶



# தமிழ்க் கட்சிகளின் ஒன்றிப்பே சம்பந்தனுக்கு ஆற்றும் நன்றி!

## வலியுறுத்துகின்றது ரெலோ

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைமை தாங்கி வழிநடத்தி வந்த இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக்காலங்களில் மனம் நொந்திருந்தார். அந்தவகையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக் கடனாகும்."

- இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) செயலாளர் நாயகம் கோ.கருணாகரம் எம்.பி., மறைந்த தலைவர் சம்பந்தனுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்த செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

06▶

## ஒற்றுமையை விரும்பிய சம்பந்தன் இன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்



"தமிழ் மக்களிடையேயும் தமிழ்க் கட்சிகளிடையேயும் ஒற்றுமையை விரும்பிய மூத்த தலைவர் இரா. சம்பந்தன், இன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்." – என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர்

06▶



பெருந்தலைவர் சம்பந்தனின் மறைவையொட்டிய விடயங்களை ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றுப் பகல் நிகழ் நிலையில் கூடியது.

விவஸ்தையே இல்லாமல் ஆளாளுக்குப் பேசினார்கள் என்று தகவல். சம்பந்தனின் பூதவுடலை வவுனியாவுக்கு, கிளிநொச்சிக்கு, யாழ்ப்பாணத்துக்கு, மாங்குளத்துக்கு, புதுக்குடியிருப்புக்கு என்றெல்லாம் ஊர்தியில் கொண்டு செல்வது பற்றியெல்லாம் ஆளாளுக்கு நீட்டி முழக்கினர்.

ஏன் சம்பந்தனுக்கு அரசு ஏற்பாட்டிலான இறுதி நிகழ்வு? அது கட்சி நிகழ்வாக இருக்க வேண்டும் என்றும் சிலர் விளாசினர்.

கடைசியில் எல்லாம்

06▶





# மேலும் பொய் சொல்லி மக்களின் வாழ்க்கையோடு விளையாடாதீர்!

## ரணிலிடம் சஜித் வேண்டுகோள்

"நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான செயற்பாட்டில், நாட்டில் கட்டமைப்பு ரீதியாக எதிர்நோக்கி வரும் அனைத்து சிக்கல்களையும் சவால்களையும் கண்டறிந்து தீர்வு காண வேண்டும். இந்தப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால்நாட்டு மக்களுக்குப் பொய்களைக் கூறி ஏமாற்றக் கூடாது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"இன்று நம் நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைச் சுமார் 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக செலுத்த வேண்டியுள்ளோம். எனவே, இந்த மரணப் பொறியில் இருந்து வெளிவரக்கூடிய வழிமுறைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டிம். நாட்டை ஆள்பவர்கள் அனைவரும் எமது நாட்டின் தற்காலிக பொறுப்பாளர்களே என்பதை நினைவில்கொள்ள வேண்டும். நாட்டுக்காக உடன்படிக்கைகளை மேற்கொள்ளும்போது தன்னைப் பற்றியோ, தனது இருப்பைப் பற்றியோ, தனது அரசியல் பயணத்தைப் பற்றியோ சிந்திக்காமல், நாட்டைப் பற்றியே சிந்தித்துச் செயற்பட வேண்டும்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

"ஆட்சியாளர் தம்மைப் பற்றி சிந்திக்காமல், நாட்டின் 220 இலட்சம் மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாட்டு மக்களை ஏமாற்றி மக்களை குறைமதிப்புக்குட்படுத்தும் காலம் முடிவுக்கு வர வேண்டும்." – என்றும் அவர் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் 276 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களைக் களுத்தறை, பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வங்குரோத்து என்பது கடனைச் செலுத்த முடியாத நிலையாகும். அதிலிருந்து விடுபடக் கடனைச் செலுத்தும் நிலைக்கு வர வேண்டும். இதற்கு வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும்போது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் மறுசீரமைப்பு செயல்முறை முன்னெடுக்கப்பட வேண்டும். தேவையின்றிச் செய்யப் போனால், பிழைப்புக்கேற்பச் செய்யப் போனால், ஏனோ தானோ என்று செய்யப் போனால் நாட்டுக்கு நன்மை பயக்காத உடன்பாடே எட்டும். எனவே, நாட்டு மக்களின் உயிருடன் விளையாடக் கூடாது. பொய்யான விடயங்களை முன்வைத்து நாட்டு மக்களை அரசியல் ரீதியாக ஏமாற்றமடையச் செய்ய வேண்டாம்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.
















# மன்னார் மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட

# யூபிலி விழாவை முன்னிட்டு முத்திரை வெளியீடு

**(வாஸ் கூஞ்ஞ, எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள யாத்திரிகர் ஸ்தலமான மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட யூபிலி ஆண்டை முன்னிட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆடி பெரு விழாவில் இந்த நூற்றாண்டு பெரு விழாவில் சில ஞாபகர்த்தமான நிகழ்வுகளுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படடிருந்தன.

அந்த வகையில் முதலாவது நிகழ்வாக மருதமடு அன்னனையின் பெரு விழாவை முன்னிட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த நவநாட்களில் இறுதி நாளான நேற்றுத் திங்கள் கிழமை காலை 10 மணியளவில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நினைவு தபால் உறையும் 25 ரூபா பெறுமதியான தபால் முத்திரையும் வெளியீடு செய்யப்பட்டன.

இவ் முத்திரை வெளியீடு மருதமடு ஆலய முன் போடடிக்கோவில் இடம் பெற்றது.

இத் தபால் முத்திரையை தபால் மா அதிபதி எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பி.றுவான் சத்குமார, மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் கையளித்து வெளியீடு செய்து வைத்தார்.

இந்நிகழ்வின்போது கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் சத்துறி பிந்தோ, பிரதி தபால் மா அதிபதி டீ.ஏ.ராஜித கே.ரணசிங்க, வட மாகாண பிரதித் தபால் மா அதிபதி திருமதி மதிவதனி வசந்தகுமார், மன்னார் அஞ்சல் அத்தியட்சகர் நாமல் குமார மற்றும் அநுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை, மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப் பிரகாசம் அடிகளார், மன்னார - யாழ் குரு முதல்வர்கள், மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோருடன் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதாரர்கன், விழாவுக்காக வருகை தந்திருந்த பெருந்தொகையான பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்டதில் 1941 ஆம் ஆண்டு வெள்ளி விழாவாகவும் , 1974 பொன் விழாவாகவும், 2000 ஆம் ஆண்டு பவள விழாவாகவும் கொண்டாடப்பட்ட நிலையில் தற்பொழுது யூபிலி விழாவாக இது கொண்டாடப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.










# மடுல்சீமையில் வீதி மறியல் ஆர்ப்பாட்டம்



(நடராஜா மலர்வேந்தன் - பசறை)

மோசமாகச் சேதமடைந்திருக்கும் மடுல்சீமை – மஹாதோவ லோவர் பிரிவு தோட்டப் பாதையைப் புனரமைத்து தருமாறு கோரி இப்பகுதி மக்கள் நேற்று வீதி மறியல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக அமீன் மீண்டும் தெரிவானார்

(ஐ.ஏ.காதிர் கான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக என். எம். அமீன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27 ஆவது பேராளர் மாநாடு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டின்போது, 2024 - 2025 ஆம் ஆண்டுகளுக்கான புதிய தலைவர் தெரிவும் இடம்பெற்றது.

இதன்போதே, சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன். மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தலைவருக்கான வாக்களிப்புத் தேர்வின்போது, என்.எம்.அமீன் 84 வாக்குகளைப் பெற்றார்.

இவருடன் எம்.எம்.ஜெஸ்மின், இர்ஷாத் ஏ. காதர், எம்.எப். றிபாஸ்,



ஏ.ஏ.எம். றிப்தி அலி ஆகியோர் போட்டியிடவிருந்த நிலையில், இதில் றிப்தி அலியைத் தவிர ஏனைய மூவரும் தலைமைத்துவப் போட்டியிலிருந்து தாமாக நீங்கிக் கொள்கின்றனர் என சபையோரின் முன்னிலையில் பகிரங்கமாக அறிவித்தனர்.

இதனையடுத்து, என்.எம்.அமீனுடன் றிப்தி அலி மாத்திரம் போட்டியிட்டார். இதன்போது, றிப்தி அலியினால் 13 வாக்குகளை மாத்திரமே பெற முடியுமாக இருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மிக நீண்ட காலமாகத் தலைமைத்துவப் பொறுப்பேற்று, பணியாற்றி வந்துள்ள நிலையில், இம்முறையும் என்.எம்.அமீனை 84 அதிகப்படியான வாக்குகளால் அதிகமான உறுப்பினர்கள் வாக்களித்து, அவரை மீண்டும் தலைவராகத் தெரிவு செய்து வெற்றியீட்டச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவராக மீண்டும் தெரிவான என்.எம்.அமீனுக்கு, ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளனர்.

# பஸ் கட்டணங்கள் 5.07 வீதம் குறைப்பு



நேற்று நள்ளிரவு முதல் பஸ் கட்டணம் 5.07 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய கட்டணத்திற்கமைய குறைந்த பட்ச பஸ் கட்டணம் 28 ரூபாவாகும்.

2002 ஆம் ஆண்டின் அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாக தனியார் பஸ் சங்கங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் கீழ் ஜுலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை அறிக்கையின் உள்ளடக்கங்களை இதுவரை நாம் பார்க்கவில்லை

## எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



"வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை அறிக்கையின் உள்ளடக்கங்களை இதுவரை நாங்கள் பார்த்ததில்லை. அதனால் உடன்படிக்கையை நாடாளுமன் றத்துககு சமர்ப்பிப்பதை ஒத்திவைக்கவேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார்.

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வெளி நாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை அறிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"நற்செய்தி அடங்கிய அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. அதாவது சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட சில இணக்கப்பாடுகள் அடங்கிய ஆவணம்.

இந்த அறிக்கையை இன்று நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக் கப்போவதாக வெள்ளிக்கிழமை கூடிய கட்சி தலைவர்கள் கூட்டத்தின்போது அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால் இந்த அறிக்கையை இதுவரை நாங்கள் பார்த்த தில்லை என தெரிவித்தபோது, குறித்த அறிக்கை அனைத் தும் இணையத்தளத்தில் பதிவிடப்பட்டிருப்பதாக கூட்டத் தில் கலந்துகொண்டிருந்த அரச தரப்பினர் தெரிவித்த னர்.

என்றாலும் கட்சி தலைவர்கள் கூட்டம் முடிந்த பின்னர் அது தொடர்பில் இணையத்தளத்தில் பார்வையிட்டபோது, அவ்வாறான எந்த அறிக்கையும் இருக்கவில்லை.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது அனைவரும் எமக்கு பொய் தெரிவித்துள்ளனர். திங்கட்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து செவ்வாய்க்கிழமைக்கு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாகவே அன்று அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் அந்த அறிக்கையில் என்ன இருக்கிறது என இதுவரை எங்களுக்கு தெரியாது.

அத்துடன், இந்த கடன் மறுசீரமைப்பு ஆவணத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை கைச்சாத்திடவில்லை என்றே எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

எனவே, வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன் படிக்கை அறிக்கையை அரசாங்கத்துக்கு எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும். என்றாலும் அரசாங்கம் நிலையிற் கட்டளைகளை இடைநிறுத்தி, இன்று இந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக தெரிவித்திருக்கிறது.

என்றாலும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எமக்கு இணக்கம் இல்லை. அதனால் வெளிநாட்டு படுகடன் மறு சீரமைப்பு உடன்படிக்கை அறிக்கையை நாடாளுமன்றத் துக்கு சமர்ப்பிப்பதை ஒத்திவைத்து, உடன்படிக்கை யில் அரசாங்கம் முறையாக கைச்சாத்திட்ட பின்னர் சமர்ப் பிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம்."– என் றார்.

# சோதனையிடச் சென்ற அரச அலுவலர்களை கடைக்குள் பூட்டி வைத்து அச்சுறுத்தினராம்!

## யாழில் மருந்தக உரிமையாளர் கைது





யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரை பூட்டி வைத் தார் என்று கூறப்படும் கடை உரிமையாளரைப் பொலி ஸார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் உள்ள மருந்தகமொன்றிலேயே இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சுகாதார அமைச்சகத்தின் உணவுக் கட்டுப்பாடு நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக மருந்தகமொன்றைச் சோதனையிடச் சென்றனர்.

சோதனையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கும் போது அதி காரிகளை கடை உரிமையாளர் மருந்தகத்திற்குள் வைத் துப் பூட்டி அச்சுறுத்தியுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார், அனு மதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித் தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தும் பொலிஸார், விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத் துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

புஸ்வாணமானது. அது சம்பந்தன் குடும்பத்தவர்கள் விருப்பம் என்று ஒரேடியாகக் கூறி விவகாரம் முடித்து வைக்கப் பட்டது.

அமிர்தலிங்கத்தின் பூதவுடலை எடுத்துச் சென்ற மாதிரி சம்பந்தனின் பூதவுடலை அலைக்கழிக்க வைக்க அவரது குடும்பத்தவர்கள் விரும்பவில்லை.

அத்தோடு அரச ஏற்பாட்டிலான இறுதி நிகழ்வாக நடத்துவதில் உள்ள சாதகங்களும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டன.

இன்றிரவும் எட்டு மணி அளவில் தமிழரசு அரசியல் குழு நிகழ் நிலையில் மீண்டும் கூடி விடயங்களை ஆராயவிருப்பதாகத் தெரிகிறது.

இதே சமயம் சம்பந்தனின் சொந்த இடமான திருகோணமலையிலும் நேற்றுப் பகல் கட்சியினர் சிலர் கூடி இறுதி நிகழ்வை அரசு ஏற்பாட்டிலான வகையில் நடத்துவதற்கு எதிராக பிணக்குப் பட முற்பட்டனர் எனத் தெரிகின்றது. எனினும் தீர்மானம் குடும்பத்தவர்களுடையது என்று விளக்கி அவர்களது அதிருப்தியும் அடக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்றைய நிகழ் நிலைக் கூட்டத்தில் பரிமாறப்பட்ட ஒரு சொல்லாடல் குறித்து கூட்டத்தில் பங்கு பற்றியோர் தங்களுக்குள் கமுக்கமாகச் சிரித்துக் கொள்ளும் ஒரு சம்பவமும் நடந்தது.

சம்பந்தனின் பூதவுடல் ஏ.எவ். றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் இன்று வைக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் அதனை Funeral Parlour என்பார்கள். நம்மில் பலருக்கும் பெண்கள் ஒப்பனை செய்யும் Beauty Parlour (அழகு நிலையம்) குறித்துத்தான் தெரியும்.

கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதி ஒருவர் "அப்ப சம்பந்தன் ஐயாவின் body கொழும்பில் பியூட்டி பார்லரிலை இருந்து பார்லிமெண்ட்க்கு நேரடியாக போகுமா?" - என்று கேட்டுத் தொலைத்தாராம்.

நம் அரசியல் பிரமுகர்களின் ஆங்கில அறிவு அவ்வளவுதான்....!

\+ \+ \+

இலங்கை அரசு வெளிநாட்டு கடன் மீளளிப்பு மறுசீரமைப்பு தொடர்பாக அந்த நாடுகளுடன் கண்டுள்ள ஒப்பந்தத்தில் பல்வேறு நாடுகளும் இன்னும் ஒப்பமிட்டு முடிக்கவில்லையாம். அதனால்தான் அந்த ஒப்பந்தப் பிரதிகளை எதிர்க் கட்சிகளுக்குக் கையளிக்கக் காலதாமதமாவதாக அரசு தரப்பில் கூறப்படுகின்றது. உண்மையாக இருக்கலாம்.

அதனால் இந்த ஒப்பந்த ஆவணம் தொடர்பாக இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்த விசேட விவாதம் இன்று ஒரு நாளாக சுருக்கப் படுகிறது. அந்த ஒப்பந்த இணக்கம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கம் அளித்து உரையாற்றுகின்றமையுடன் இன்றைய விசேட அமர்வு முடிவுக்கு வரும். நாளை அமர்வு இடம் பெறாது.

அந்த ஒப்பந்த ஆவணம் மீதான விவாதம், அந்த ஆவணம் எதிரணியினருக்குக் கையளிக்கப்பட்ட பின்னர் ஜுலை 9ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிகின்றது.

அன்றைய தினம்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு ஓட்டம் படித்து இரண்டாவது வருடம் நிறைவாகும்.

## எரிவாயு விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று காலை வெளியாகும் என லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விலைகள் இன்றைய தினம் அறிவிக்கப்படும் என அந்நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாதாந்த எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய இந்த விலை திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

"இரா.சம்பந்தனின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்" - என்ற தலைப்பில் அவர் நேற்று விடுத்த அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

"தமிழ் மக்களால் தமிழ்த் தேசியப் பெருந்தலைவராகப் பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா ஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைத் தீர்வுக்கான பயணத்தில் பாரியதொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்றது.

தந்தை செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் வரிசையில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற மறைந்த அரசியல்வாதிகள் வரிசையில் சம்பந்தனும் இணைந்து கொண்டுள்ளார்.

1977 களில் தன்னை நாடாளுமன்ற அரசியலுக்குள் நுழைத்துக் கொண்ட சம்பந்தன் 1983 ஜுலைக் கலவரத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டும், இலங்கை அரசமைப்பின் 6ஆம் திருத்தத்துக்கு ஆதரவளிக்க முடியாது என்றும் எதிர்ப்பை வெளிக்காட்டியமையால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருந்தார். இருந்தாலும் அதன் பின்னரான 18 வருடகாலங்கள் நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியில் இருந்திருந்த போதிலும் 2001ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்திருந்தார். அது தமிழ் மக்களுக்கான அவருடைய அரசியல் பணிக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

2009 இற்குப் பிறகு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியது மட்டுமல்ல ஒருமித்த, பிரிக்கப்படாத நாட்டுக்குள் பல விமர்சனங்களுக்கும் பலரது வேறுவிதமான விருப்பங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு ஒரு சமரஷ்டி முறையிலான தீர்வைக் கொண்டுவருவதற்கு அவர் முயற்சித்தார்.

அவ்வேளைகளில் மாறி மாறி வந்த அரசுத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டவர். அதே நேரத்தில் முஸ்லிம் மக்களையும், அவர்களது பிரச்சினைகளையும் சமாந்தரமாக அணுகுவதிலும் பின்நிற்கவில்லை. அதனால் தமிழ் மக்களிடமும் தமிழ் அரசியல்வாதிகளாலும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தார்.

தன்னுடைய முதுமையையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொடர்ச்சியாகப் பாடுபட்டவரான இரா. சம்பந்தன், வெளிநாட்டுத் தூதுவர்கள், உலக நாடுகளின் தலைவர்களாலும் மரியாதையுடன் பார்க்கப்பட்டவராக இருந்தார். சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும், பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடமும் தமிழ் மக்களுடைய விடயங்களை எடுத்தியம்பும் வகையில் தன்னுடைய அரசியலைத் தொடர்ந்து வந்திருந்த அவர் இறுதி நேரத்திலும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் ஜனநாயக வழிமுறையில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார்.

அந்தவகையில்தான் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சிங்கள அரசியல்வாதிகளுடனும் கலந்துரையாடியதுடன், 2015ஆம் ஆண்டு அமைந்த நல்லாட்சி அரச காலத்தில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த வேளையில் அரசமைப்பு மாற்றத்துக்காகப் பாடுபட்டிருந்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது அரசியல் ரீதியாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஓர் பேரிழப்பாகும். 2001ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைமை தாங்கி வழிநடத்தி வந்த இரா. சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக்காலங்களில் மனம் நொந்திருந்தார். அந்த வகையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக் கடனாகும்.

ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியை இழந்து துயருறும் தமிழ் மக்கள், அவருடைய குடும்பத்தார், அவருடைய கட்சியினர், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

## ஒற்றுமையை விரும்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் கூறுகையில்,

"எதுவாக இருந்தாலும் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தவர் இரா. சம்பந்தனே.

அரசியல் எனக்குப் பிடிக்காது என்றாலும் அவர் செய்த காரியத்துக்கு எனது நன்றிகள் என்றென்றும் அவருக்கு உரித்தாவன.

அவர் தமிழ் மக்களின் மூத்த தலைவர். அவர் சுகமாக இருந்த காலத்தில் தமிழ் மக்களிடையேயும் தமிழ்க் கட்சிகளிடையேயும் ஓரளவு ஒற்றுமை இருந்து வந்தது. அவரைச் சுகயீனம் பீடித்து அவரின் கருத்துக்களை மற்றவர்கள் கூற எத்தனிக்கையிலேயே எம்முடைய ஒற்றுமை சீரழிந்தது.

அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்ற கரிசனையை எங்கள் யாவருக்கும் தந்துவிட்டு அவர் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார். அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்." - என்றார்.



# பதில் சட்டமா அதிபராக நேற்று பாரிந்த ரணசிங்க பதவியேற்பு

சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க பதில் சட்டமா அதிபராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க முன்னாள் பிரதம நீதியரசரான கே.ஏ.பாரிந்த ரணசிங்கவின் புதல்வராவார்.

சட்டமா அதிபராக செயற்பட்ட சஞ்ஜய் ராஜரத்தினத்தின் சேவைக்காலம் கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமையினால் கடந்த சில நாள்களாக சட்டமா அதிபர் பதவியில் வெற்றிடம் நிலவியது.

சட்டமா அதிபரின் பதவிக்காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு அரசமைப்புப் பேரவையிடம் ஜனாதிபதி யோசனை முன்வைத்த 2 சந்தர்ப்பங்களிலும் அந்த யோசனை பெரும்பான்மையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

# இன்று பாடசாலைகளுக்கு முன்பாக ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவர்

## இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் தெரிவிப்பு

தமது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக் கோரி இன்று பாடசாலைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு ஆசிரியர் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கங்கள் தீர்மானம் மேற்கொண்டுள்ளன.



ஜனாதிபதியின் அச்சுறுத்தலுக்கு எதிராக இந்தப் போராட்டதை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புக்கொடி மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தொழிற்சங்க நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், பெற்றோர்களை நிலைமையைப் புரிந்து கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் வெள்ளிக்கிழமை அனைத்து அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒடுக்க முன்னெடுக்கும் வழிமுறைகளை கண்டிக்கின்றார் எனவும், என்ன நடந்தாலும் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடருமெனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சம்பந்தனின் மறைவின் பின்...!

மிக முக்கியமான ஒரு காலகட்டத்திலே தமிழர்களுடைய பெரும் தலைவராக இருந்த சம்பந்தன் இனத்தை விட்டுப் பிரிந்திருக்கின்றார்.

வயது மூப்புக் காரணமாக அவரின் பிரிவு எதிர்பார்க்கப்பட்டதுதான். அண்மைய காலத்தில் இனத்திற்கு சரியான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு அவரது உடல்நிலை இடம் கொடுக்கவில்லை என்பதும் வாஸ்தவம்தான்.

ஆயினும் அவரது மறைவு தமிழினத்திற்குப் பெரும் இடர்களைத் தரும் நிகழ்வாக மாறப்போவது கண் கூடு.

சரியோ, பிழையோ ஐம்பதுகள், அறுபதுகளில் இருந்து நேற்று வரை, ஒட்டுமொத்தத் தமிழினத்திற்காகப் பேசுவதற்கென்று அடையாளம் காணப்பட்ட ஒரு தலைமைக் குரல் இருந்தது. நேற்றுடன் அது இல்லை என்பது தான் இப்போதைய யதார்த்தப் புறநிலையாகும். இது மறுக்க முடியாத உண்மை.

அறுபதுகளிலே, எழுபதுகளிலே ஒட்டுமொத்தத் தமிழினத்தின் தலைவராக தந்தை செல்வா இருந்தார். பின்னர் போராளிகளின் எழுச்சி பெறும் காலம் வரை தளபதி அமிர்தலிங்கம் தமிழினத்தின் ஒட்டுமொத்தத் தலைவராக விளங்கினார்.

அதன் பின்னர் தங்களின் வீரமும், தியாகமும் நிறைந்த அர்ப்பணிப்புப் போராட்டம் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்த் தேசிய இயக்கமாகவும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ்த் தேசியத் தலைவராகவும் உயரும் அரசியல் நிலைவரங்கள் கட்டவிழ்ந்தன.

2009 இல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட போது, அதுவரை தமிழர் தரப்பின் ஏகத் தலைமைத்துவமாக மதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளினால் அடையாளம் காட்டப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் இனத்தை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றது. அதன் தலைவராக சம்பந்தன் ஒன்றரை தசாப்த காலம் கோலோச்சினார்.

இன்று அவர் நம்மை விட்டு பிரியும் போது, எல்லாம் மோசம் அடைந்து விட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இல்லை, தமிழர்கள் ஒரு கட்டுறுதியான கட்டமைப்பிலும் இல்லை. அதனால் தமிழர்களின் தலைவர் என்று சம்பந்தனுக்குப் பிறகு ஒருவரைத் தனித்துச் சுட்டக் கூடிய நிலைமையும் இல்லை என்ற அவலத்தைத் தான் சம்பந்தனின் மறைவு நமக்கு தந்து நிற்கின்றது. அது தான் உண்மை. யதார்த்தம்.

அந்த அவல நிலைக்கு அப்பாலும் சில பல பிரச்சினைகள் உண்டு.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் போட்டியிட்டு வென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய பத்து எம்.பிக்களையும் இன்று வரை நாடாளுமன்றத்தில் ஓர் அணியாக இயக்குவதற்கு அந்த நாடாளுமன்ற குழுத் தலைவர் என்று பெயரளவிலேனும் சம்பந்தன் இருந்தார்.

நாடாளுமன்றக் குழுவின் தலைவர் என்ற முறையில் நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் உட்பட முக்கிய விடயங்களை சம்பந்தனின் சார்பில் சுமந்திரன் எம்.பி. கையாண்டு வந்தார்.

சம்பந்தனின் மறைவுக்கு பின்னர் தற்போதைய நாடாளுமன்றம் எவ்வளவு காலத்துக்கு இயங்கும் என்பது தெரியவில்லை. ஜனாதிபதி தேர்தல் இன்னும் நூறு நாள்களில் நடந்து முடிந்த கையோடு இந்த நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டு விடும் என்பதுதான் பொதுவான கள நிலைமையாகும்.

ஆக, இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இன்னும் 100 நாள் முதல் ஆகக் கூடியது ஒரு வருடம் தான்.

எனினும் அதற்கிடையில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அணியின் புதிய குழுத் தலைவர் யார் என்ற களேபரம் வெடிக்கும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான தகுதி,திறமை, ஆளுமை குறித்தெல்லாம் யாரும் சிந்திக்கப் போவதில்லை. நாடாளுமன்றக் குழுத் தலைவராகுவதற்காக - அந்தப் பதவிக்காக - எதிரும் புதிருமான தரப்புகள் எல்லாம் அணி சேரும். நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் விவாதிக்க ஆளுமையற்றோர் தெரிவாகும் வாய்ப்பும் உள்ளது.

இப்படி, சம்பந்தனின் மறைவை அடுத்து பல திருக்கூத்துகள் அரங்கேறும். அவற்றை பார்த்திருப்பது தமிழர்களின் தலை எழுத்து...!

# இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்துக்களின் பிரதிநிதி அல்லர்

## ராகுல் காந்தி கடும் விமர்சனம்



இந்தியாவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்களவை முதல் கூட்டத் தொடரில் பாரதிய ஜனதாக்கட்சிக்கும் காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளுக்கும் இடையில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

எதிர்க்கட்சி தலைவரும் காங்கிஸின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி, பிரதமர் மோடியை விமர்ச்சித்த நிலையிலேயே இந்த வாதப்பிரதிவாதங்கள் தீவிரமாகியுள்ளன.

பிரதமர் மோடி பரமாத்மாவுடன் கூட பேசுவார். ஆனால். மணிப்பூர் மக்களுடன் பேச மாட்டார் என இதன்போது ராகுல் காந்தி கடும் விமர்சனம் செய்துள்ளார்.

மணிப்பூரில் கடந்த பல மாதங்களாக வன்முறைகள் இடம்பெற்ற போதும் பிரதமர் மோடி அங்கு செல்லாமை மற்றும் அந்த பிரச்சினையை தீர்க்காமை என்பவற்றை மையப்படுத்தியே இந்த விமர்சனத்தை ராகுல் காந்தி வெளியிட்டுள்ளார்.

இதன்போது ராகுல் காந்தி மேலும் குறிப்பிடுகையில்.

“பிரதமர் நரேந்திர மோடி, தமக்கு கடவுளுடன் நேரடி தொடர்பு இருப்பதாக கூறுகிறார். அவர் நேரடியாகவே பரமாத்மாவுடன் பேசுவார். பரமாத்மாவும் நேரடியாகவே மோடியின் ஆன்மாவோடு பேசுவார்.

இந்த நிலையில். நான் உட்பட்ட எல்லோரும் உயிரில் ரீதியாக பிறப்போம், மரணத்தை தழுவுவோம். ஆனால் பிரதமர் அப்படிப்பட்டவர் அல்லர்.

அவர் பரமாத்மாவிடம் கேட்டு தான் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை கொண்டு வந்தாரா?”– என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது, குறுக்கிட்ட பிரதமர் நரேந்திர மோடி, “ராகுல் காந்தி இந்துக்களை வன்முறையாளர்கள் போல சித்தரிக்க முயலுகிறார்” என்று தெரிவித்துள்ளார்.

எனினும், அதனை மறுத்த ராகுல் காந்தி, மோடி இந்தியாவின் பிரதமர் மட்டுமே. அவர் இந்துக்களின் பிரதிநிதி அல்ல, உண்மையான இந்துக்கள் வெறுப்புணர்வை தூண்ட மாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ”இந்து என்று சொல்லிக்கொள்பவர்கள் வன்முறையைப் பேசுகிறார்கள், வன்முறை செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி திட்டவட்டமாக கூறுகிறார். கோடிக்கணக்கான மக்கள் தங்களை இந்துக்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வது அவருக்குத் தெரியாது போல. வன்முறையை எந்த மதத்துடனும் இணைப்பது தவறு. அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்.” –என்றார்.

# நீட் முறைகேடு விவாதத்துக்கு அனுமதி மறுப்பு: எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் போராட்டம்




நீட் முறைகேடு குறித்து மக்களவையில் விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்ட சபாநாயகர் முடிவை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் நேற்று ஏிநடப்பு செய்தனர்.

தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எம்.பிக்கள் போராட்டம் நடத்தினர்

18 ஆவது மக்களவை கூட்டத்தொடர் இரண்டு நாள்கள் விடுமுறையைத் தொடர்ந்து நேற்று கூடியது. அப்போது உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு அவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நீட் முறைகேடு விவகாரத்தை மக்களவையில் எழுப்பினார்.

அப்போது பேசிய அவர், “நாடாளுமன்றத்தில் இருந்து நாட்டுக்கு ஒரு செய்தி பரப்பப்படுகிறது. நாடாளுமன்றத்துக்கு நீட் விவகாரம் முக்கியம் என்ற செய்தியை மாணவர்களுக்கு கடத்த விரும்புகிறோம். எனவே, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும்.” என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், “நாடாளுமன்றத்துக்கு சில விதிமுறைகள் உள்ளன. அதன்படி, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பிறகு விவாதங்கள் நடத்தப்படும்” என்றார்.

அதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முழக்கம் எழுப்பினர். தொடர்ந்து விவாதம் நடத்த சபாநாயகர் அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

பின்னர் மக்களவையின் இரண்டாவது அமர்வில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பா.ஜ.கவின் எம்.பி. அனுராக் தாக்கூர் தாக்கல் செய்தார். இந்த தீர்மானத்தை பா.ஜ.கவின் எம்.பி. பன்சூரி ஸ்வராஜ் ஆதரித்தார். தொடர்ந்து குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் உரையாற்றினர்.

# பிரான்ஸில் வெடித்தது வன்முறைப் போராட்டம்





பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் தீவிரவலதுசாரி கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து எதிர்த்தரப்பினர் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், தலைநகர் பரீசின் பல பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளதோடு, பொதுச் சொத்துக்களும் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் தீவிரவலதுசாரிகள் முன்னிலைபெற்றுள்ள அதேவேளை தற்போதைய ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கட்சி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகளிற்கு எதிரான ஆர்.என். கட்சி 33 வீத வாக்குகளை பெற்றுள்ளது. இடதுசாரி கூட்டணி 28 வீத வாக்குகளை பெற்றுள்ளது. ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கூட்டணிக்கு 21 வீத வாக்குகள் கிடைத்துள்ளன என பிரான்ஸ் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மக்ரோனின் கட்சி முற்றாக துடைத்தெறியப்பட்டுள்ளது என ஆர்.என்.கட்சியின் மரைன் லெ பென் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பிரான்ஸ் மக்கள் வாக்களித்தால் நான் அனைத்து பிரான்ஸ் மக்களினதும் பிரதமராக தயார் என ஆர்.என். கட்சி தலைவர் ஜோர்டன் பர்டெல்லா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இதற்கு எதிராக தீவிர இடதுசாரிகள் இஸ்லாமிய ஆதரவாளர்கள் உட்பட சமூகத்தின் பலதரப்பட்டவர்கள் இந்த வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், பாரிஸில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதால், அங்கு பதற்றமான சூழலும் ஏற்பட்டுள்ளது.

இந்த வன்முறைகளில் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டுள்ள சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பரிஸின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலின் முதல் சுற்றில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெற்றுள்ளமை அதன் வரலாற்றில் இதுவே முதல்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர் விசா கட்டணத்தை இருமடங்காக்கியது ஆஸி.



சர்வதேச மாணவர்களுக்கான விசா கட்டணத்தை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அதன்படி, 710 அவுஸ்திரேலிய டொலராக இருந்த விசா கட்டணம் தற்போது 1,600 டொலராக அதிகரித்துள்ளது.

இந்த கட்டண உயர்வு நேற்று முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


அவுஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானிஸ் தலைமையிலான அரசாங்கம், மாணவர்களின் இடம்பெயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தக் கட்டண உயர்வை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விசா கட்டண உயர்வு, சர்வதேச கல்வி முறையின் தரத்தை மேம்படுத்தவும், இடம்பெயர்வை குறைக்கவும், சிறப்பாகவும் மாற்ற அவுஸ்திரேலியாவிற்கு உதவும் என அவுஸ்திரேலிய உட்துறை அமைச்சர் கிளேர் ஓநீல் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த முடிவு சர்வதேச மாணவர்களின் கல்விக் கட்டணத்தை நம்பியுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் பொருளாதாரம் இரண்டுக்கும் உகந்ததல்ல என அவுஸ்திரேலிய பல்கலைக்கழகக் குழுவின் தலைவர் லூக் ஷீஹி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானிய நாடுகளை விட அவுஸ்திரேலியாவின் மாணவர் விசா கட்டணம் உயர்ந்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் வெளியான தரவுகளின் படி, கடந்தாண்டு செப்டம்பர் வரை அவுஸ்திரேலியாவில் குடியேறுபவர்கள் 60 வீதத்தால் உயர்ந்து 5 லட்சத்து 48 ஆயிரத்து 800 பேரை எட்டியுள்ளதாகத் அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.



# தமிழருக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்புதான் சம்பந்தன் ஐயா!

## இரங்கல் செய்தியில் இராதாகிருஷ்ணன் எம்.பி.



மூத்த தமிழ் தலைவர்களில் ஒருவரான எதிர்கட்சி தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவு நாட்டின் அனைத்து தமிழர்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சி தலைவர் இரா. சம்பந்தனின் மறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வில் மிகவும் நிதானமாகவும் பொறுப்புடனும் தனது கொள்கையில் பிடிப்புடனும் செயற்பட்ட ஒரு மூத்த தலைவர் இரா.சம்பந்தன்.

அவருடைய அனுபவம், கல்வி, ஞாபசக்தி என்பன ஏனையவர்களை வியக்கவைக்கும்.

தன்னுடைய அரசியல் அனுபவத்துடன் தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு சரியான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டவர். அவருடைய காலத்தில் அது நிறைவேறாமல் போனமையானது பெரும் துரதிர்ஷ்ட வசமே.

எனவே அவருடைய வழியில் சென்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

அமரர் இரா.சம்பந்தன் மலையக மக்களுடன் மிகவும் நெருக்கமான ஒரு உறவைக் கொண்டிருந்ததுடன் மலையக மக்கள் மீது பெரும் மதிப்பை கொண்டிருந்தவர்.

இந்த தருணத்தில் மலையக மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்றுள்ளது.

# நிரப்ப முடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது!

## இம்ரான் எம்.பி. அனுதாபம் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நிறைந்த அனுபவசாலியுமான சம்பந்தன் ஐயாவின் இழப்பு நிரப்பு முடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்று திருகோணமலை மாவட் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலஞ்சென்ற எனது தந்தை எம்.ஈ.எச்.மகரூப் போன்றே இவரும் 1977 இல் முதன் முதல் நாடாளுமன்றம் தெரிவானார். இவரது நாடாளுமன்ற அனுபவம் என்னுடைய வயதையும் விடவும் அதிகமாகும். நாடாளுமன்றத்தில் சட்ட ரீதியான விவாதங்களில் நிறைந்த பங்களிப்பை வழங்கியவர் இவர்.

1977 முதல் 1983 வரை நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட இவர் 1983 இல் இவரது கட்சித் தீர்மானத்துக்கமைய நாடாளுமன்றத்தைப் புறக்கணித்ததால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

1997 இல் அமரர் தங்கத்துரையின் இழப்பால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அடுத்த விருப்பு வாக்கு நிலையிலிருந்த இவர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். பின்னர் 2001 முதல் இறக்கும் வரை தொடர்ச்சியாக வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியைப் பெற்றதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை இவர் வழங்கி வந்தார். வயதான காலத்திலும் இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ் மக்களது வகிபாகம், தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமை தொடர்பில் சர்வதேச ரீதியாக பல்வேறு தரப்பினருடனும் பேசிவந்துள்ளார்.



முஸ்லிம் மக்களுடனும் மிகவும் அந்நியோன்யமாக நடந்துள்ளார். கடந்த காலங்களில் இவரது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் பள்ளிவாசல்கள் புனரமைப்புக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை நான் அறிவேன்.

2015 இல் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்கு பக்கத்துணை வழங்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். இதில் சம்பந்தர் ஐயாவின் பங்கு அளப்பரியது.

இலங்கை அரசியல் வரலாற்றில் 2015 இல் எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் திருகோணமலை மாவட்டத்துக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். இவரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், பொது மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.



# தமிழ் - முஸ்லிம் உறவில் இணைப்பு பாலமாக விளங்கிய ஒரு அரசியல் ஆளுமை சம்பந்தன்!

## அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்



தமிழ் சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், முதுபெரும் தமிழ் அரசியல் தலைவர் சம்பந்தனின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில், குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் பொதுவாகச் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தனது வாழ்நாள் முழுவதுவும் அயராது பாடுபட்ட அரசியல் ஆளுமையான சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தேன்.

தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடாக நாடாளுமன்றத்தில் பிரவேசித்து, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி , 2001 ஆம் ஆண்டில் இருந்து அண்மை காலம்வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகத் திகழ்ந்து, அது தோற்றம் பெற்றதில் இருந்து அதனைச் சிறப்பாக இருந்து வழி நடத்திய ஆளுமையாக இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா வரலாற்றில் இடம் பெறுகிறார்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகள் வழங்கி வந்த "நிறைவேறாத" வாக்குறுதிகளை மையப்படுத்தியதாக அவரது வாதங்கள் நாடாளுமன்றத்தின் உள்ளும், புறமும் ஆணித்தரமாகவும் ஆக்ரோஷமாகவும் ஓங்கி ஒலித்ததால் பேரினவாத சக்திகளுக்கு சம்பந்தன் சிம்ம சொப்பனமாகத் தோற்றமளித்தார்.

தந்தை செல்வாவின் காலத்தில் இருந்து மரபு ரீதியாக பின்பற்றப்பட்டு வந்த தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டம் பின்னர் நாளடைவில் மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலைகள் காரணமாக திசை மாறிய போதிலும் கூட, அரசுக்கும் விடுதலை புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதான பேச்சுகளைத் தமிழர் தரப்புகளுக்கும் சிறுபான்மையினருக்கும் ஏற்புடையதான விதத்தில் கருத்தொருமைப்பாட்டைக் காணும் நோக்குடன் முன்னெடுப்பதில் சம்பந்தன் ஐயா நாட்டம் கொண்டிருந்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்தவரை அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு அங்கு வாழும் முஸ்லிம்களின் இணக்கப்பாடு இன்றிச் சாத்தியமாகிவிடாது என்பதில் சம்பந்தன் ஐயா மிகுந்த உறுதியாக இருந்துவந்தார். அதனை அவர் தனது சொல்லிலும் செயலிலும் தெளிவாக வெளிக்காட்டினார். தமிழ்ச் மூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் ஆழ அகலங்களையும், ஏற்ற இறக்கங்களையும் அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார்.


1977 இல் இருந்து வெவ்வேறு காலப் பகுதிகளில் திருகோணமலை மாவட்டத்தை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய சம்பந்தன் ஐயா பின்னர் 2000 ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி இறுதி மூச்சுவரை தனது பங்களிப்பை பயனுறுதியுடைய முறையில் வழங்கித் தமிழரசு கட்சி கடைபிடித்து வந்த கோட்பாடுகளுக்கு அமைய கச்சிதமாகப் பேணிப் பாதுகாத்து வந்தார்.

பிற்காலத்தில் முதிர்ந்த வயதில் உடல் நிலை தளர்ந்திருந்த போதிலும் கூட, சக்கர நாற்காலியில் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த போதிலும், அவரது ஆற்றோட்டமான பேச்சாற்றல் அருகியிருக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அவரது நினைவாற்றல் மெச்சத்தக்கது. ஒவ்வொரு காலகட்டத்திலும் இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரம் அணுகப்பட்ட விதம் குறித்தும், அதன் ஒவ்வொரு படிமுறை குறித்தும் சுட்டிக்காட்டி விலாவாரியாக அவற்றுக்கு விளக்கமளிக்கும் அளவுக்கு அவரது ஞாபக சக்தி இருந்திருக்கிறது.

நாட்டில் இக்கட்டான சூழ்நிலையில், மிகவும் முக்கியமான காலகட்டத்தில் அவரது இழப்பு நேர்ந்திருப்பது வருந்தத்தக்கதாயினும், அவருக்குச் செலுத்தக் கூடிய நன்றிக் கடன் இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்கள் உள்ளடங்கிய சிறுபான்மையினரும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் போது குறைந்தபட்ச சேதாரங்களோடு அவசியமான விட்டுக் கொடுப்புகளை ஒவ்வொரு தரப்பும் செய்து நாட்டில் நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்குப் பாடுபடுவதாகும்.

அன்னாரின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் திருகோணமலை மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும், தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# சாணக்கியத்துடன் சவால்களை எதிர்கொண்டவர் இரா.சம்பந்தன்

## முன்னாள் எம்.பி. திலகர் இரங்கல்



"வெளியில் இருந்து அரசியல் விமர்சனம் செய்வதென்பதும் அமைப்பு ரீதியாக அரசியல் செற்பாடுகளை முன்னெடுத்து அரசியல் தளத்தில் இயங்குவது என்பதும் வேறு வேறானவை. அரசியல் பேசிக் கொண்டு இருப்போர் மிக இலகுவாக எண்ணும் பல விடயங்கள் யதார்த்தமான செயற்பாடுகளில் பல்வேறு சிக்கலான சவால்களை உருவாக்கும். அத்தகைய சவால்களை இலங்கை அரசியல் சூழலில் எதிர்கொண்டு இயங்கிய தலைவரே இரா.சம்பந்தன் ஆவார். அன்னாருக்கு மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்." - என்று அதன் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவையடுத்து அவர் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை அரசியலில் தமிழர்களின் தீர்மானமிக்க காலப்பகுதி 2009 ஆகும். சுமார் நான்கு தசாப்தங்களாக இலங்கைத் தமிழர் தரப்பின் கோரிக்கையாக இருந்த தனி நாட்டு கோரிக்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானிப்பது இலகுவானதல்ல. அதனை இலங்கை சுதந்திர தின நிகழ்வு ஒன்றில் இலங்கைத் தேசியக் கொடியான சிங்கக் கொடியை இரா. சம்பந்தன் கையில் ஏந்தி பிரகடனம் செய்வது என்பது மிகவும் துணிச்சலான செயற்பாடாகும். ஒரு பக்கம் பெரும்பான்மை சிங்கள அரசியல் தரப்பு தேசியக் கொடியை தமது இனத்தின் வெற்றியின் அடையாளமாக ஆக்கிரமித்துக் கொண்ட நிலையில், மறுபக்கம் தமிழர் தரப்பு தம் மீதான ஆக்கிரமிப்பின் அடையாளமாக அதனைக் கருதி வெறுத்து ஒதுக்குகையில் அதே தேசியக் கொடியை இணக்கப்பாட்டின் அடையாளமாகக் கையாள்வது என்பது மிகவும் சவாலானதும் சாதுரியமானதுமான நிலைப்பாடாகும்.

தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களை சமாளிக்கும் அதே நேரம் அவர்கள் எதிர்த்தரப்பாகக் கருதும் இலங்கை அரசையும் சமாளிக்கும் இராஜதந்திரம் மிகவும் சாமர்த்தியமானது.

2005 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் தரப்பு முற்றுமுழுதாகப் புறக்கணித்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து வந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் தரப்புக்கு எதிராக உள்நாட்டுப் போருக்குத் தலைமை கொடுத்த தளபதி சரத் பொனசேக்காவுக்கு ஆதரவு வழங்குவதற்கு எடுத்த தீர்மானமும் அதனை நோக்கி மக்களை வழிநடத்தியதும் துணிச்சலான அரசியல் நகர்வாகும்.

வெளியில் நின்று அரசியல் விமர்சனம் செய்வோர் ஆயிரம் கதைகள் பேசலாம். ஆனால், இரா. சம்பந்தன் ஓர் அரசியல் கட்சியின் தலைவராக இத்தகைய தீர்மானங்களை எடுத்து கட்சியை வழிநடத்துவது இலகுவானதல்ல. அரசியல் செயற்பாட்டாளர்களின் மிகப் பிரதான சவால் எதிர்க்கட்சியினருடனான போராட்டத்தை விட தமது கட்சியை வழிநடாத்துவதாகும். கூடவே இருந்து தமக்கும் தலைமைக்கும் அமைப்புக்கும் அச்சுறுத்தல் விடும் உட்கட்சி அரசியலைச் சமாளிப்பது மிகவும் சவாலானது. அதனை சம்பந்தன் ஐயா மிகச் சாதுரியமாகச் செய்தார்.

தீபாவளிக்குத் தீர்வு வரும், தைப் பொங்கலுக்குத் தீர்வு வரும் என அவர் விடுக்கும் அறிக்கைகள் விமர்சனத்துக்கும் நகைப்புக்கும் உள்ளான போதும் உட்கட்சி அரசியலை சமாளிக்க அவரிடம் இருந்த துரும்பாக அதனை அவர் கையாண்டார் என்பதே உண்மை. அதனை நுணுக்கமாக பார்க்கும்போது புரியும்.

2015 நல்லாட்சிக் காலத்தில் ஆளும் கட்சி உறுப்பினராக நான் இருந்த போதும் ஆளும் கட்சி ஆசன எண்ணிக்கை அதிகமாதலால் எனக்கு எதிர்த்தரப்பு பக்கத்திலேயே ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனால் எதிர்க்கட்சித் தலைவரான சம்பந்தன் ஐயாவுடன் உரையாடும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது. "வணக்கம் அய்யா" என நாங்கள் மரியாதை செய்ய, "இன்றைக்கு எனன தம்பி விவாதம்?" என்றுதான் எங்களுடன் பேச்சை ஆரம்பிப்பார். "இந்த விவாதத்தில் நான் பேச வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீங்களா?" என ஒரு புன்னகையுடன் கேட்பார். "ஐயா பேசினால் கேட்க ஆவலாக உள்ளோம்" என்பது எனது பொதுவான பதிலாக இருக்கும். விவாதம் ஆரம்பித்தவுடன் அவரது ஆங்கில உரையைக் கேட்க ஆச்சரியமாக இருக்கும். சுட்டிக்காட்டுதல்களை ஏற்ற இறக்கங்களுடன் ஆங்கில மொழியை அவர் கையாளும் விதமே தனித்துவமிக்க து. அது சம்பந்தனுக்கே உரிய கலை எனச் சொன்னால் மிகையில்லை. உரை முடிந்து சபையில் இருந்து வெளியேறும் அவரை கட்சி பேதம் மறந்து எழுந்து நின்று சக உறுப்பினர்கள் வழியனுப்பும் காட்சி இனியொரு தமிழ்த் தலைவருக்குக் கிடைக்கும் என நான் எண்ணவில்லை.

நல்லாட்சிக் காலத்தில் அவர் சாதித்திருக்க வேண்டிய பல விடயங்களை ஏனோ தவறவிட்டார் என்பது அவரது தலைமை மீதான விமர்சனம் இருந்தாலும் அவரது காலத்தில் நாடாளுமன்ற அவையில் பேசும், பழகும் வாய்ப்புப் பெற்றவனாக , அவரது அனுபவங்களில் பல பாடங்களைக் கற்றுக் கொண்டவனாக, அவர் படியேறி சபையில் இருந்து வெளியேறும் பொழுதுகளில் அவரது கரம் பற்றி உதவியவனாக எனது ஆத்மார்த்தமான அஞ்சலியை சம்பந்தன் எனும் பெருந்தலைவருக்கு வழங்குவதுடன் அன்னாரது குடும்ப உறுப்பினர்களுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் மலையக அரசியல் அரங்கத்தின் சார்பிலும் மலையகத் தமிழ் மக்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றேன்." - என்றுள்ளது.

# தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்த சம்பந்தன் ஐயாவின் குரல் மௌனித்தது!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆழ்ந்த இரங்கல்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவுக்கு மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அவரது மறைவை அடுத்து மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் முதுபெரும் தலைவர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது போராடியவர் தமிழ் மக்கள் இந்த மண்ணில் சகல உரிமைகளையும் பெற்றுக் கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்த திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜவரோதயம் சம்பந்தன் தனது 91 ஆவது வயதில் காலமாகினார் என்னும் செய்தி தமிழ் மக்களுக்கு கவலை அளிக்கும் செய்தியாகும்.

நீண்ட நெடிய ஒரு ஜனநாயகப் பாரம்பரியத்தில் வந்து ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் ஆயுதப் போராட்ட இயக்கங்களுடனும் கலந்துரையாடி ஒன்றிணைந்து செயற்பட்டவர்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சி முறையை உருவாக்கி ஒன்றுபட்ட நாட்டுக்குள் அவர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழவேண்டும் என்ற உறுதியான கொள்கையுடன் செயற்பட்டது மாத்திரமல்லாமல், ஒவ்வொரு சர்வதேச சமூகத்துடனான சந்திப்புகளிலும் ராஜதந்திர மட்ட சந்திப்புகளிலும் இதனை வலியுறுத்தி வந்தவர்.

சிங்கள சமூகம் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட பிரிக்கப்பட முடியாத பிரிபடாத நாட்டுக்குள் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர். இதற்காக நாடாளுமன்றத்திலும் சர்வதேச அரங்குகளிலும் சிங்கள அரசியலவாதிகளுடனும் கலந்துரையாடி குரல்கொடுத்து வந்தவர்.

தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம் ஆகியோரின் வழியில் தமிழரசுக்கட்சியின் தலைவராகப் பணிபுரிந்தது மாத்திரமல்லாமல் இலங்கைத் தீவில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் குரல்கொடுத்த பெருந்தலைவர்களில் சம்பந்தனும் ஒருவர்.

சம்பந்தன் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் பல்வேறு தரப்புகளால் முன்வைக்கப்பட்டாலும் அவர் தனது வரம்புக்குள் இருந்து தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் போராடியவர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தின் இறுதி அங்கமாக சம்பந்தன் இருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அங்கம் வகித்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவருடன் இணைந்து பணியாற்றி காலத்தை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

அன்னாருடன் பழகிய தருணங்களை நெஞ்சில் நிறுத்தி, மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்னாரின் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது. அன்னாரின் குடும்பத்தினர், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.-என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் மறைவு ஈழத் தமிழருக்குப் பெரும் இழப்பு!

## டாக்டர் ராமதாஸ் இரங்கலில் தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவு ஈழத் தமிழர்களுக்குப் பெரும் இழப்பாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எம்.பியுமான இரா.சம்பந்தன் மறைவுக்கு பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ம.க. நிறுவன தலைவர் டாக்டர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், திரிகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியவர் இரா. சம்பந்தன் முதுமை காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பினர், ஈழத்தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்த இரா.சம்பந்தன், ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே போர் மூள்வதைத் தடுக்க இந்தியா முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியவர். அவரது மறைவு ஈழத்தில் தமிழர்களுக்கு உரிமைகளையும், அதிகாரங்களையும் வென்றெடுத்துத் தரும் முயற்சிகளுக்கு பெரும் இழப்பு ஆகும்.-என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் மறைவு முழு இலங்கைக்கும் பேரிழப்பு

## மருதபாண்டி ரமேஸ்வரன் எம்.பி. இரங்கல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவு முழு இலங்கைக்கும் பேரிழப்பு ஆகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா தனது 91 ஆவது வயதில் காலமானார் என்ற செய்தி பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கை அரசியலில் சேவையாற்றிய இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவு வடக்குக் கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் இலங்கை தேசத்துக்கே பேரிழப்பாகும்.

அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பு மிக்க பயணமும் அவருடைய நேர்மையான மற்றும் நியாயமான தலைமையும் எல்லா அரசியல்வாதிகளுக்கும் ஊக்கமளிக்கும்.

சம்பந்தன் தமிழ் சமூகத்தின் அசைக்க முடியாத அரசியவாதியும் ஆளுமைமிக்க மனிதருமாவார். அவரின் மறைவு இலங்கை அரசியலில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருடன் நெருங்கிய நட்பை பேணியவர்.

இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் பிரிவால் வாடும் அனைவருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றேன்.– என்றுள்ளது.

# சம்பந்தக் ஐயாவின் மறைவு மன வேதனையைத் தருகிறது!

## அ.தி.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கவலை

இலங்கையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான சம்பந்தன் உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்திருக்கும் செய்தி மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக குரல் எழுப்பிவந்த முதுபெரும் தலைவர் இரா.சம்பந்தனை இழந்து வாடும் உறவினர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அடிப்படையில் வழக்கறிஞரான இரா.சம்பந்தன் தமது வாழ்நாள் முழுவதையும் இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக அர்ப்பணித்துக் கொண்டவர். அதற்காக இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களிடம் பேசியவர். கடந்த அரை நூற்றாண்டில் இந்தியாவின் பிரதமர்களாக இருந்த அனைவரிடமும் நட்புப் பாராட்டியவர்.

இலங்கை இறுதிப் போருக்குப் பிறகு ஒன்று பட்ட இலங்கை



என்ற அமைப்புக்குள்ளாகவாவது ஈழத்தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராடி வந்தார்.

நான் ஸ்ரீலங்கன் என்று பொதுவெளியில் முழங்குவதற்கு கூட தயாராக இருக்கிறேன் ஆனால், ஒருபோதும் இரண்டாம் தர குடிமகனாக வாழ விரும்பவில்லை என்று முழங்கியவர். அவரது விருப்பத்துக்கு இணங்க இலங்கையில் ஈழத்தமிழர்களுக்குச் சம உரிமை பெற்றுத் தருவது தான் அவருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக இருக்கும்.– என்றுள்ளது.



# கடன் மறுசீரமைப்புக்கு பின் மேலும் உதவ அமெ. தயார்!

கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்த பின்னர் இலங்கையின் பொருளாதார விவகாரங்களுக்கு மேலும் ஆதரவளிக்க தயாராக இருப்பதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை நேற்று நிதியமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே, அமெரிக்கத் திறைசேரியின் ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் றொபேட் கப்ரோத் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை சரியான திசையில் பயணிப்பதால், ஏனைய நாடுகள் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில், தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.



இதன்போது, நிதி இராஜாங்க அமைச்சர் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு, அமெரிக்க அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு தமது நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.



# கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனுவின் மீதான பரிசீலனை ஒத்திவைப்பு

நாட்டிற்கு தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பான வழக்கில் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு மீதான பரிசீலனை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நிறைவடையும் வரை முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்தத் உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தொலைத்தொடர்பு சட்டத்தை திருத்த நிதிக் குழுவில் அனுமதி

இலங்கையின் தொலைத் தொடர்பு சட்டத்தை திருத்துவதற் கான திருத்தச் சட்டமூலத்திற்கு நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள் ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அந்தக் குழு கூடிய போது இவ் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த சட்டமூலம் கடந்த மே மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்பட்டது.

# ஆர்.எஸ்.ஜயசிங்கவின் சேவைக்கு ஜனாதிபதி பாராட்டுத் தெரிவிப்பு



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில் 60 வருட அரச சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்ததற்காக மூத்த மொழிப் பயிற்றுநர் ஆர்.எஸ். ஜயசிங்கவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டுத் தெரிவித் துள்ளார்.

இதன்படி ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க, மூத்த மொழிப் பயிற்று நர் ஆர்.எஸ். ஜயசிங்கவின் சேவை யைப் பாராட்டி கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவ லகத்தில் அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக நடை பெற்றது.

மூத்த மொழிப் பயிற்றுநர் ஆர்.எஸ். ஜயசிங்க, 1961 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி நில அளவைத் திணைக் களத்தில் சேவையில் இணைந்தார். மேலும் 03 ஜுலை 1974 இல் அமைச் சரவை அலுவலகத்தில் மொழி பயிற்றுநராக நியமிக்கப்பட்டார்.

அதன்படி, 2024 ஜுலை 3ஆம் திகதி, அவர் அமைச்சரவை அலு வலகத்தில் 50 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.



# அடுத்த 6 போகங்களில் நெல் விளைச்சலை இரட்டிப்பாக்கும் இலக்கினை எட்ட முடியும்

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு




"தற்பொழுது கிடைத்து வரும் நெல் அறுவடையின் அளவை எதிர்வரும் ஆறு போகங்களில் இரட்டிப்பாக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கியுள்ள இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன."

– இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்தார்.

"இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்" என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்ம கீர்த்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பாரம்பரிய விவசாயத்திற்கு அப்பால் சென்று வளர்ந்து வரும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது விவசாய அமைச்சின் பொறுப்பாகும். தற்போது இதனை வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறோம். குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் ஆறு போகங்களில் நெற்பயிர் அறுவடையின் அளவை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற இலக்கை அடையத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பக்கேஜ் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் உட்பட அனைத்து நெல் வயல்களும் நெற் பயிர்செய்கைக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

பயிரிடப்பட்ட நிலத்தை ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது நெற்செய்கையின் வெற்றிகரமான பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளதுடன் 800,000 மெற்றிக் தொன் அரிசி அறுவடை கிடைத்துள்ளது.

நெல் விலை தொடர்பில் அமைச்சு என்ற வகையில் தலையிட முடியாது. ஆனால் திறந்த பொருளாதாரத்தில் விலை பராமரிப்பு நியாயமாக இருக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது. பொருள்களின் விலை உயர்வு ஓரிரு முறை நடந்தாலும், அரசு தலையிட முடியாது. தொடர்ந்து நடந்தால், தலையிட முடியும். தற்போது இரண்டு வகையான அரிசிகளின் கையிருப்பே பேணுப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் அனைத்து வகை அரிசிகளும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

மேலும், உலர் வலயத்தில் அதிக கவனம் செலுத்தி, விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில், பயன்படுத்தப்படாத வயல் நிலங்கள் ஏனைய பயிர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இது உணவு உற்பத்தியில் சாதகமான முன்னேற்றமாக இருக்கும்.

பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைக்கு அப்பால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையாக விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்திற்கு 2500 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், இளைஞர் விவசாய தொழில்முனைவோர் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இதனால் விவசாயம், பெருந்தோட்டக் கைத்தொழில், கால்நடை மற்றும் மீன்பிடித் தொழில் ஆகிய துறைகளில் இளைஞர்களின் தொழில் முனைவோர் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதோடு, புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினால் இளைஞர் சமூகத்தை இந்தத் துறைக்கு ஈர்க்கும் முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன.

தற்போது விவசாயத் துறையை உள்ளூர் எல்லைக்கு அப்பால் வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஸ்ட்ரோபரி, மாம்பழம், அன்னாசி போன்ற பழப் பயிர்களை ஏற்றுமதி செய்யும் போக்கு அதிகரித்துள்ளது.

இது தவிர, விளைச்சல் ஏற்ற இறக்கங்கள் மற்றும் பயிர் இழப்புகளை மையமாக வைத்து தம்புள்ளையில் குளிரூட்டி நிலையமும் நிறுவப்பட வுள்ளது. தகுந்த பயிர்கள் பற்றி விவசாயிகளை அறிவூட்டி வருகிறோம். எமது அமைச்சின் கீழ் இயங்கும் பொருளாதார நிலையங்களின் முகாமைத்துவத்தினால் பயிர் சேதத்தை சுமார் 50 வீதம் வரை குறைக்க முடிந்துள்ளது.

விவசாயிகளின் ஆதரவுடன், பயிர்களை முறையாக சந்தைக்கு விடுவதற்கான முறையைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். அறுவடைக்குப் பிந்தைய பாதிப்புகளை குறிப்பாக போக்குவரத்தின் போது குறைக்க ரயில்வே சேவையைப் பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே போக்குவரத்து அமைச்சுடன் ஆராய்ந்து வருகிறோம். தற்போதும் பெலியத்தையிலிருந்து பயணிக்கும் ரயில் சேவைகளை ஏனைய மாகாணங்களிலும் சேவையில் ஈடுபடுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது." – என்றார்.

# தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தைத் தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்ப நினைப்பது கனவாகவே அமையும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு




"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டத்திற்குப் புறம்பாக செயற்பட எவரேனும் கனவு கண்டால், இந்த நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது."

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கடந்த காலங்களில் திறைசேரியில் டொலர் கையிருப்பு இருக்கவில்லை. நாடு கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயுக்கான வரிசைகள் உருவாகின. சமூகம் முழுமையாக வெறுப்புக் கலந்த சமூகமாக மாறி, நாடு முழுவதும் போராட்டங்கள் ஏற்பட்டன.

நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத வேளையில், பிரதமராகவும், முதிர்ந்த அரசியல்வாதியாகவும் அனுபவம் வாய்ந்த ரணில் விக்கிரமசிங்க அந்தச் சவாலை ஏற்று நாட்டை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். அவர் செய்த முதல் விடயம், சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதனை வெற்றியடையச் செய்ய பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

அத்துடன், ஒரு நாடு என்ற வகையில் இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்ததால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது. இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்குச் செல்ல முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தின் பின்னரே, நம் நாடு சுவாசிக்கத் தொடங்கியது எனலாம்.

அனைத்து விடயங்களிலும் தன்னிறைவு அடையாத நாடாக நாம் கண்டிப்பாக வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும். அரசியல் ரீதியில் யார் தலைவராக இருந்தாலும் சர்வதேச அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் கொடுக்கல் – வாங்கல்களைப் பேண முடியாது. இத்தகைய பரிவர்த்தனைகள் உலக விதிகளின்படி மட்டுமே நடக்க வேண்டும். நீடிக்கப்பட்ட கடன் வசதி ஒப்பந்தத்தின்படி, 2027 ஆம் ஆண்டு வரை கடன் ஒப்பந்தத்தில் ஈடுபட முடிந்துள்ளது. எனவே நாங்கள் வருடந்தோறும் பொருள்களை இறக்குமதி செய்ய முடியும்.

இன்னும் சில மாதங்களில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் அரச ஊழியர்களின் சம்பளம், சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும என்பன ஏழைகளுக்கு வழங்கப்படும். மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இல்லாமல், வரவு – செலவுத்திட்டத்தை 2027 வரைத் தயாரிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியம் 2025 வரவு செலவுத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும். உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வரவு – செலவுத் திட்டத்திற்காக வழங்குகின்றன. வரவு – செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கும் போது மேலும் 3655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணமாகக் கிடைக்கும் என நம்பப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் இவ்வாறுதான் தயாரிக்கப்பட வேண்டும். யார் ஆட்சி செய்தாலும் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நிவாரணங்கள் போன்றவற்றுக்கு பணம் கண்டிப்பாகத் தேவை. இந்த முறையைத் தவிர, வரவு – செலவுத் திட்டத்திற்கான பணத்தைப் பெற வேறு வழியில்லை.

இந்த கடன் நிவாரணம் என்பது கணிப்புகள் மாத்திரமே. இந்த முன்னறிவிப்பு 2027 ஆம் ஆண்டுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் உதாரணமாக, 2027 ஆம் ஆண்டுக்குள், வரவு – செலவுத் திட்டத்தில் பாரிய பற்றாக்குறை ஏற்படாவிட்டாலும், 3911 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 629 அமெரிக்க டொலர்களும், சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 600 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கியிடமிருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வரவு – செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்க வழங்கப்பட உள்ளன. 2027 வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும். அந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட சர்வதேச சந்தைக்குச் செல்ல வேண்டும். தற்பொழுது யார் ஆட்சியில் இருந்தாலும், இலங்கையின் பிணைமுறிப் பத்திரங்களை உலகில் யாரும் வாங்க மாட்டார்கள். 2027 இல்தான் பிணைமுறிப் பத்திரங்களை வெளியிட முடியும். இந்த வகையில், 2027 ஆம் ஆண்டுக்குள் நமது நாட்டில் 14 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியக் கையிருப்பு இருந்தால் மட்டுமே பிணைமுறிப் பத்திரங்கள் வெளியிட முடியும். தற்போது, 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறையான திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தும் அதேவேளை, ஜனாதிபதி வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இதில் எந்தவொரு ஒப்பந்தமும் வேலைத்திட்டமும் மறைக்கப்பட்டதல்ல. ஜனாதிபதி சகல தகவல்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அந்தப் பின்னணியில், இந்த உருவாக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தைத் தவிர்த்து எவராலும் அரசாங்கத்தை நடத்த முடியாது. இந்தப் பொருளாதாரத் திட்டத்திற்குப் புறம்பாக யாராவது ஆட்சி செய்ய வேண்டும் என்று கனவு கண்டால், நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என்பதைக் கூற வேண்டும்."– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.07.2024

## மேஷம்

இன்று வளர்ச்சிக்கு உகந்த நாள். உங்கள் திறமைகளை எளிதாக வெளிப்படுத்துவீர்கள். இன்றைய தினத்தில் முக்கியமான முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியாக செய்வீர்கள். உங்கள் சக பணியாளர்களிடம் நல்ல விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். நல்லிணக்கம் காணப்படும்.

நிதிவளர்ச்சி நன்றாக உள்ளது. இன்று போதுமான செழிப்பு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் தைரிய உணர்வு உங்களுடைய நல்ல ஆரோக்கியத்துக்கு வழிகாட்டும்.

## ரிஷபம்

உங்கள் பேச்சின் மூலம் சாதனை படைப்பீர்கள். அதே சமயத்தில் விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வேலை கிடைப்பதற்கான சாதகமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் துணையைக் கவரும் வகையில் உங்கள் அன்பைப் பேசி வெளிப்படுத்துவீர்கள்.

நிதிவளர்ச்சி நன்றாக உள்ளது. உங்கள் சேமிப்பும் அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடும் இருக்காது.

## மிதுனம்

இன்றைய நாள் சற்று முடக்கமாக காணப்படும். உங்கள் செயல்களை புத்திசாலித்தனத்துடன் செய்ய வேண்டும். இன்று நீங்கள் தவறு செய்ய வாய்ப்பு உள்ளது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்படலாம். பணியில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் காதலை நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க உதவும்.

பூர்வீகசொத்துக்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இன்று உங்களுடைய ஆரோக்கியத்தை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். ஆனால் உங்கள் தாயாரின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

## கடகம்

இன்று வளர்ச்சி காண்பதில் சற்று சிரமம் காணப்படும். ஆழ்ந்த தூக்கத்துக்கு வாய்ப்பில்லை. குழம்பிய மனம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள். தியானம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேர்ந்து அதனால் உயர் அதிகாரிகளிடம் கெட்ட பெயர் ஏற்படலாம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் காதல் விவகாரங்களை வேறு ஒரு நாளுக்கு தள்ளிப் போடுவது நல்லது.

அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். பணத்தை புத்திசாலித்தனமாக செலவு செய்ய நீங்கள் திட்டமிடவேண்டும்.

மனஅழுத்தத்தின் காரணமாக உங்களுக்கு தொடை வலி ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். அதன் காரணமாக பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்று நீங்கள் உறுதியையும் வலிமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்கள் பணிகளை நிறைவேற்றுவதற்கு சில தாமதங்கள் அல்லது தடைகள் ஏற்படலாம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிர்ஷ்டம் குறைந்து காணப்படுவதால் கடின உழைப்பின் மூலம் மட்டுமே பணம் சம்பாதிக்க முடியும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படலாம்.

## கன்னி

கடுமையான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தனித்தன்மையை வெளிக் கொணர்வீர்கள்.

நீங்கள் அர்ப்பணிப்புடனும் முழு முயற்சியுடனும் பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

இன்றைய நாளில் திருப்திகரமாக உணர்வீர்கள். மகிழ்ச்சியான தருணங்களை உங்கள் துணையுடன் இன்று பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் இனிமையாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதிநிலை இன்று சீராக இருக்கும். உங்கள் குடும்பத்திற்காக பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

## துலாம்

சில தடங்கல்களை சந்தித்த பின் இன்றைய தினத்தை நீங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். இன்றைய தினத்தை சரியான முறையில் பயன்படுத்த வழிகளும் உபாயங்களும் உங்களிடம் இருக்கும்.

குறித்த நேரத்தில் பணிகளை செயல்படுத்த மிகவும் கடினமாக இருக்கும். உங்கள் பணிகளை முடிக்க மிகுந்த தாமதமாகும்.

இன்று உங்கள் துணையுடன் சூடான சர்ச்சைகள் ஏற்படலாம் இது உங்கள் துணையுடனான புரிந்துணர்வில் ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக இருக்கலாம்.

தேவையற்ற செலவுகளுக்காக பணத்தை செலவு செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று உங்களிடம் தொடர் முயற்சிகள் காணப்படும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களுக்கு இட்ட பணிகளை எளிதாக முடிப்பீர்கள். ஆசைகள் கூட எளிதில் நிறைவேறும்.

இன்று காதல் கனியும் நாள். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

இன்று நாள் முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். முழுதிடத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.07.2024




உங்கள் பணிகளை விரைந்து செய்ய இயலாது. உங்கள் செயல்களில் சிறிது மந்த நிலை காணப்படும். இது உஙகளுக்கு கவலையை ஏற்படுத் தும்.

இன்று எதிர்மறைவிளைவு களை சந்திக்க நேரலாம் மற்றும் உங்கள் எதிர்மறை எண்ணங்கள் பிரச்சினையை வெற்றி கொள்ள உதவும் உங்கள் ஆற்றலை மேலும் குறைக் கும். உங்கள் தைரியக்குறைவு காரணமாக உங்கள் வளர்ச்சியில் மந்தத்தன்மை காணப்படும்.

காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை தேவை.

இன்று பணம் குறைந்து காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதில் தடைகள் காணப்படும்.

இன்று பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.




உங்கள் முன்னேற்றம் குறித்து கவ லைகள் காணப்படும். கவனமாக இருப் பது நல்லது.விஷயங்களை இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். அதன் காரணமாக மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடனான தொடர்பாடலில் சில சிக்கல்கள் காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரலாம். வறுத்த மற்றும் காரமான உணவுகள் உட் கொள்வதை தவிர்த்தல் நல்லது.




இன்றைய தினம் உயிர்ப்பற்ற நாளாக இருக்கும் முக்கியமான முடிவு களை வேறொரு நாளுக்கு தள்ளிப் போடுங்கள். இன்று மனஉறுதி இழந்து காணப்படுவீர்கள். உங்களின் சுய வளர்ச்சிக்கு நீங்கள் உறுதியுடன் போராட வேண்டும்.

ஒரே ஒரு முயற்சியில் உங்கள் பணியில் வெற்றி காண முடியாது. உங்கள் பணி தாமதமாகும்.

உங்கள் துணையுடனான முக்கியமான சந்திப்பை தவிர்த்துவிடு:ங்கள் அல்லது ஒத்திப் போடுங்கள். இன்று அதற்கு உகந்த நாள் அல்ல.

நீங்கள் எதிர்பார்த்த் அளவிற்கு நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் இன்று சிறப்பாக இருக்காது.




இன்றைய நாள் செழிப்பான பலன் கள் கிடைப்பதற்கு சாதகமான நாள் அல்ல. தடைகள் நிறைந்து காணப் படும். குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். இது மிகுந்த வருத்தத்தை உண்டாக்கும்.

பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. அதனால் உங்கள் சௌகரியங்களை இழக்க நேரும். நேர்மறை எண்ணத்துடன் கவனமாக பணி களைக் கையாளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது.இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பிற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். அதற்காக செலவுகள் செய்ய நேரலாம்.





Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park